


**04.06.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **நாட்டின் எரிசக்தி துறை கடந்த 11 ஆண்டுகளாக பெரிய** அளவிலான கட்டமைப்பு மாற்றங்களுடன் வளர்ச்சி பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்தமாதம் 21-ம் தேதி** தொடங்கும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு அறிவித்துள்ளார்.

3. **சென்னை அருகே இருங்காட்டு கோட்டையில் ரோபோடிக் இயந்திர** பாகங்கள் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

4. **தமிழகத்தில் கூடுதலாக 40 இடங்களில் அறிவுசார் மையங்கள்** ஏற்படுத்தப்பட உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. **K.N.** நேரு தெரிவித்துள்ளார்.

5. **இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிட்டன் கலப்பு இரட்டையர்** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் சதீஷ் கருணாகரன், ஆதியா வரியாத் இணை முன்னேறியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**தூய்மை எரிசக்தியை முன்னிறுத்தும் வகையில்** நாட்டின் எரிசக்தி துறை கடந்த 11 ஆண்டுகளாக பெரிய அளவிலான கட்டமைப்பு மாற்றங்களுடன் வளர்ச்சி பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பெட்ரோலிய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி, நாளேட்டில் வெளியிட்டுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், சீர்த்திருத்தங்கள், பசுமை முன்னெடுப்பு திட்டங்கள், சுயசார்பு பாரததத்திற்கு உயர்முன்னுரிமை போன்றவற்றின் மூலம் எரிசக்தி துறைக்கு உந்துதல் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்

திரு. ஹர்தீப்சிங் பூரி தமது கட்டுரையில் உலகளவில் இந்தியா துரிதமாக வளர்ந்து வளரும் பெரிய பொருளாதர நாடாக மட்டுமல்லாமல், சுயசார்பு பாரத பாதையில் ஒரு சிறந்த ஆளுமையை எட்டியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு எரிசக்தி துறை முக்கிய பங்காற்றி இருப்பதாகவும், திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு இந்த மாற்றத்திற்கான அடித்தளத்தை உருவாக்கியதாகவும் அக்கட்டுரையில் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் வலுவான தொலை நோக்கு திட்டங்களாலும், அவரின் உறுதியான தலைமையிலும் நம்நாடு நம்பிக்கையுடன், சுயசார்பு பாரத பாதையை வெற்றிநடை போடுவதாக திரு. ஹர்தீப் சிங் பூரி அந்த கட்டுரையில் மேலும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**மத்திய அமைச்சர்கள் குழு கூட்டம்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் மத்திய** அமைச்சர்கள் குழு கூட்டம் புதுதில்லியில் இன்றுமாலை நடைபெறுகிறது

ஏப்ரல் 22-ம் தேதி நடைபெற்ற பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் ராணுவ நடவடிக்கைகளுக்கு பின்னர் பிரதமர் முதல் முறையாக மத்திய அமைச்சர்கள் குழு கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்ச்சியான மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் எதிர்கால திட்டங்கள் விரிவாக விவாதிக்கப்படும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖

**கிரண் ரிஜுஜு**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்தமாதம் 21-ம் தேதி முதல் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதனை அறிவித்த அவர், ஆகஸ்ட் 12-ம் தேதி வரை இந்த கூட்டத்தை நடத்த மத்திய அரசு திட்டமிட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**அனைத்து கட்சிக்குழு**

**தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக** நாடுகளிடையே எடுத்துரைக்கும் 7 குழுக்களில், 4 குழுவினர் தங்களது பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பினர்.

இக்குழுவினர் சர்வதேச நாடுகளின் தலைவர்கள், மூத்த அதிகாரிகள், முதன்மை ஆலோசகர்கள், ஊடக பிரிவினர், இந்திய வம்சாவளியினரிடையே இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் கட்சி உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான நாடாளுமன்ற குழுவினர் இன்று பிற்பகல் தாயகம் திரும்புகின்றனர்.

கத்தார், தென்னாப்பிரிக்கா, எத்தியோப்பியா, எகிப்து நாடுகளுக்கு இந்த குழு பயணித்தது.

பி.ஜே.பி. உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு, பெல்ஜியம் தலைநகர் பிரெஸில்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய யூனியன் தலைமையகத்தில் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்து விளக்கமளித்து வருகிறது.

காங்கிரஸ் தலைவர் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் வாஷிங்டன் DC-யில் முக்கிய பிரதிநிதிகளையும், அமைச்சர்களையும் சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் குறித்து எடுத்துரைத்தது.

❖❖❖❖❖❖❖

**ரிச்சர்டு மார்ல்ஸ்**

**இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய நாட்டு பாதுகாப்பு அமைச்சர்கள்** புதுதில்லியில் இன்று சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், ஆஸ்திரேலிய துணை பிரதமரும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான திரு. ரிச்சர்டு மார்ல்ஸ் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆஸ்திரேலியா ஆதரவு அளிப்பதாக திரு.மார்ல்ஸ் இக்கூட்டத்தின் போது தெரிவித்தார்.

இருநாடுகளும் வரும் காலங்களில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த உறுதிபூண்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

**சுதான்ஷு திரிவேதி**

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல் காந்தி சரணடைதல் தொடர்பாக தெரிவித்ததாக கூறப்படும் கருத்துக்களுக்கு பி.ஜே.பி. கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. செய்திதொடர்பாளர் திரு. சுதான்ஷு திரிவேதி, திரு. ராகுல் காந்தியின் கருத்துக்கள், ராணுவ வீரர்களின் வீரத்தையும், தியாகத்தையும் அவமதிப்பதாக உள்ளது என்று குறைகூறினார்.

மும்பை தீவிரவாத தாக்குதலுக்கு பின்னர் பாகிஸ்தான் உடனான பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்படாது என்று அப்போதைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தெரிவித்தது குறித்து வினா எழுப்பிய அவர், இக்கூற்றே சரணடைந்ததை குறிப்பதாகும் என்றார்.

1971-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான சண்டையில் நம் ராணுவம் முழுமையான வெற்றிபெற்ற பின்னரும், பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் ஏன் அந்நாட்டுவசம் விட்டுக்கொடுக்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார்.

❖❖❖❖❖❖❖

**ஜிதேந்திரா சிங்**

**13-வது தேசிய ஓய்வூதியர்கள் குறைதீர்நாள் கூட்டம் புதுதில்லி** விஞ்ஞான் பவனில் மத்திய பணியாளர்கள் நலன் மற்றும் ஓய்வூதியர்கள் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரா சிங் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

17 துறைகள் மற்றும் அமைச்சகங்களுக்கு உட்பட்ட குடும்ப ஓய்வூதியம் தொடர்பான 417 மனுக்களுக்கு இதில் தீர்வு காணப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டு கோட்டை சிப்காட் தொழில்** பூங்காவில் 300 கோடி ரூபாய் மதிப்பிலான செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோடிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்து வைத்தார்.

ராணிப்பேட்டை சிப்காட்டில் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காற்று பிரித்தெடுப்பு ஆலையையும் அவர் துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**தமிழகத்தில் கூடுதலாக 40 இடங்களில் அறிவுசார் மையங்கள்** ஏற்படுத்தப்பட உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி எடமலைப்பட்டி புதூரில் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி கட்டடத்தை இன்று திறந்துவைத்து பேசியஅவர், திருச்சி பஞ்சப்பூரை சுற்றியுள்ள இடங்களில் 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளுக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

**.. வாய்ஸ் ..**

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணாக்கரின் தனித்திறன்களை கண்டறியும் பொறுப்பு பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**திருச்சி அந்தநல்லூரில் இந்துசமய அறநிலையத் துறை ஆய்வாளர்** அலுவலகம், திருப்பைஞ்ஞீலி அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோவிலில் செயல்அலுவலக கட்டடத்தை

மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று திறந்து வைக்கவுள்ளார்.

பழூர் அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோவிலில் அன்னதான கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவைக்கும் அமைச்சர், மண்ணச்சநல்லூர், பிச்சாண்டார் கோவில் அருள்மிகு உத்தமர் திருக்கோவிலில் பசுக்கள் காப்பகத்தினையும் திறந்துவைக்கிறார்.

சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலில் கோபுரங்கள் மற்றும் விமானங்கள் ஒளிரூட்டும் நிகழ்ச்சியிலும் அமைச்சர் கலந்து கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

**பெரியகருப்பன்**

**தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் எண்ணற்ற** திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**K.R.**பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னை பல்லவன் சாலையில், கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சேவைகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்தப்பட்ட மாநகர பேருந்துகளை இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பயிர் கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவி உள்ளிட்ட 34 வகையான கடனுதவிகள் கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

❖❖❖❖❖❖❖

**மெய்யநாதன்**

**மயிலாடுதுறை மாவட்டம் தூண்டில் வளைவு பகுதியில் உள்ள** முகத்துவாரத்தை தூர்வாரி ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளை இன்று நேரில் ஆய்வு மேற்கொண்ட அவர், இப்பகுதி மீனவர்களின் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

**மேட்டூர் அணையிலிருந்து வரும் 12-ம் தேதி** தண்ணீர் திறந்துவிடப்படவுள்ள நிலையில் நீர்வளத்துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் திரு. தயாளகுமார் அணையை இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

பராமரிப்பு மற்றும் நீர் திறப்பிற்கான ஏற்பாடுகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**இதனிடையே காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து** வரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று 6 ஆயிரத்து 234 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 113 அடியாக உள்ளது.

❖❖❖❖❖❖❖

**க்ரிஷி சங்கல்ப் வாய்ஸ்**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் க்ரிஷி சங்கல்ப் அபியான் வேளாண்** உத்தரவாத இயக்கத்தின் கீழ், மத்திய அரசின் வேளாண் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருவதாக மாவட்ட வேளாண் அறிவியல் மையத் தலைவர் திரு.சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார். **.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**கண் அழுத்த நோய் வாய்ஸ்**

கண் அழுத்த நோய்க்கான சிகிச்சைகளுக்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே கண் அழுத்த சிகிச்சை குறித்து பட்டுக்கோட்டையை சேர்ந்த கண் பரிசோதகர் மருத்துவர் **ஜெ. மன்னர் மன்னன்** எமது செய்திபிரிவிடம் பேசுகையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின்** மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ட்ரீஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை - உக்ரைன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தையை சுற்றுக்கு இந்தியாவின் சதீஷ் கருணாகரன், ஆதியா வரியாத் இணை முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

❖❖❖❖❖❖❖